முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 634**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

24.06.2021, வியாழக்கிழமை

1. ஓங்கார சூட்சுமமே அரங்கா போற்றி
ஓங்கார நாதமே தேசிகா போற்றி
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே
ஓங்காரக்குடிலின் ஞானி உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசி தனை பிலவ மிதுன திங்களில் உரைப்பேன்
அரங்கனே கலியுகத்தின் சிறந்த ஞானி
ஆசி பெற்று அரங்கன் பதம் பணிந்தோர்க்கு
அழியாமை என்கின்ற வரம் உறுதியாகும்
3. ஆகவே அரங்கன் துவக்கிய உலகமாற்றத்திற்காக
அடியவர்கள் கொண்டு செய்த தர்மத்தின் பலம்
மிகையாகி உலகமெங்கும் பரவிவர
முழுமைபட இந்த கலியுகம் ஞானயுகமாக மாற்றம் பெறும்
4. மாற்றம் தரவேண்டும் என்றே
மக்களை நோக்கி என் ஆற்றலை
ஆற்றல்பட வரமாக தந்தருளும் அரங்கன் தொடர்பும் தர்மபலமும்
அளவில்லா கொண்டுள்ள மக்கள் மூலமே
5. மூலமாக ஞான ஆட்சி உருவாகும்
முழுமைபட உலகம் பெரும் பாதுகாப்பை பெறும்
காலனை வென்று அரங்கன் வழிவரும் மக்கள்
கலியுகத்தில் அழியாமை பெறக்கூடும்
6. கூடுமே எங்கும் எதிலும்
குருஅரங்கன் நாமஜெபம் செய்த மக்களுக்கு
ஈடேறும் இனி பிறவாத பெரும்பேறு
எல்லா நன்மைகளும் உண்டாகி கலியுகத்தில்
7. கலியுகத்தில் பாதுகாப்பு சக்தி கூடி
கருணைபட அரங்கன் ஆசியோடு
கலி உயிர்க்கு கேடு என்ற இன்னல்கள் இல்லாத
பாதுகாப்பான உலகமாக இந்த பேருலகம் மாறக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—